# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்: 259 /பேரூ/2022**
**நாள் : 01.02.2023**

திரு. ச. கார்த்திகேயன்,
சேத்தூர், விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சேத்தூர் போஸ்ட், பிள்ளைமார் தென்வடல் தெரு, எண்.42 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ச. கார்த்திகேயன் என்பவரது 15.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2022 அன்று பெறப்பட்டு, 259/பேரூ/2022 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சேத்தூர் போஸ்ட், பிள்ளைமார் தென்வடல் தெரு, எண்.42 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ச. கார்த்திகேயன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

மதுரை மண்டலம், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் மாபெரும் நிதி மோசடி மற்றும் ஊழல் நடைபெற்றது தெரிய வருகிறது. இது சம்பந்தமாக பேரூராட்சிகளின் ஆணையர் உதவி இயக்குநர் பேரூராட்சிகள், விருதுநகர் மாவட்டம் ஆட்சியர், லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத் துறைக்கும் பல்வேறு புகார்கள் தெரிவித்தும் நாளது வரை மேற்கண்ட அலுவலக அரசு அதிகாரிகள், பேரூராட்சி அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் கீழ்கண்ட மோசடி மற்றும் முறைகேடுகளை முறைமன்ற நடுவம் முன் சமர்ப்பிக்கிறேன்.

தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் முறைகேடு

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் பிரதம மந்திரி திட்டத்தில் தூய்மை இந்தியா திட்டத்தில் கட்டப்பட்ட தனிநபர் கழிப்பிடம் (IHHL)(Individual House Hold Latrine கட்டும் திட்டத்தில் மாபெரும் நிதி மோசடி மற்றும் ஊழல் முறைகேடு நடைபெற்றிருப்பது தெரியவருகிறது.

செயல் அலுவலர், நிர்வாக பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் கணினி இயக்குபவர் ஆகியோர் வேண்டிய நபர்கள் மற்றும் ஏற்கனவே கட்டப்பட்ட பழைய கழிப்பிடங்களின் புகைப்படத்தை (முறையாக கழிப்பிடம் கட்டாமல்) (ஆன்லைனில்) பதிவேற்றம் செய்தும், பயனாளிகள் மூலம் கட்டப்பட்ட கழிப்பிடங்களை புகைப்படம் மட்டும் எடுத்துக்கொண்டு மேற்கண்ட பயனாளிகளிடம் எந்தவித (ஒப்புதல்) சம்மத கடிதமும் பெறாமல் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர்கள் மூலமாக கழிப்பிடம் கட்டப்பட்டதாக பொய்யான தகவல்கள் அடிப்படையில் மேற்கண்ட கழிப்பிடங்கள் கட்டப்பட்டதாக பேரூராட்சி அலுவலக அதிகாரிகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் பல லட்சங்கள் பண மோசடியில் ஈடுபட்டுள்ளது தெரியவருகிறது.

சுமார் 1000 நபர்களுக்கு மேல் கழிப்பிடம் கட்டாமல் செயல் அலுவலர், தனி அலுவலர் (மதுரை மண்டலம் உதவி இயக்குநர்) பொறியாளர் ஆகியோர் யாரும் ஸ்தல ஆய்வு செய்யாமல் போலியான கழிப்பிட புகைப்படத்தை கணினியில் (ஆன்லைனில்) பதிவேற்றம் செய்து முறைகேடு செய்ததை கீழ்க்கண்ட பட்டியலில் சமர்ப்பித்துள்ளேன்.

| வருடம் (நிதி ஆண்டு) | தூய்மை இந்தியா திட்டத்தில் அரசு ஒதுக்கிய தனி நபர் கழிப்பிட எண்ணிக்கை |
|---|---|
| 2015–16 | 187 |
| 2016–17 | 462 |
| 2017–18 | 545 |
| மொத்தம் | 1194 |

மதுரை மண்டலம், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சிக்கு மேற்கண்ட அட்டவணையில் உள்ளபடி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் 2015-16ஆம் ஆண்டு முதல் 2017-18ஆம் ஆண்டு முடிய மொத்தம் 1194 என்ற எண்ணிக்கையில் அரசு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் அதற்கான அந்தந்த கால ஆண்டுகளில் உள்ள இலக்கு மற்றும் எண்ணிக்கையில் உரிய நபர்கள் கழிப்பிடம் கட்டாத காரணத்தால் பேரூராட்சியில் முந்தைய ஆண்டுகளுக்குரிய கழிப்பிடங்கள் மற்றும் நடப்பு ஆண்டுகளில் கட்டி முடிக்க வேண்டிய கழிப்பிடங்களை கட்டி முடிக்காமல் போலியான புகைப்படங்கள் மற்றும் பொது மக்கள் கட்டிய கழிப்பிடங்களின் புகைப்படங்களை மட்டும் இணையதளத்தில் (ஆன்லைனில்) பதிவேற்றம் செய்தும், 2015-16ம் ஆண்டு, 2016-17 மற்றும் 2017–18 ஆகிய மூன்று ஆண்டுகளுக்குரிய சுமார் 1000 கழிப்பிடங்களையும் 2018ம் ஆண்டில் ஒருசில நாட்களில் கட்டி முடித்ததாக பொய்யான ஆதாரங்களோடும், அதற்கான அரசு மானியத்தை ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.8000/-வீதம் கழிப்பிடம்

கட்டிய பொதுமக்களிடம் கொடுக்காமல் ஒப்பந்ததாரர்கள் கட்டியதாக பொய்யான ஆவணங்கள் தயாரித்து சுமார் 80 லட்சத்திற்கு ஊழல் செய்திருப்பது தெரியவந்தது.

பொதுமக்கள் யாரும் மேற்கண்ட கழிப்பிடங்கள் கட்டித்தருவதற்கு பேரூராட்சியிலோ அல்லது ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்புதல் கடிதமோ வழங்கவில்லை. செயல் அலுவலர் மற்றும் தனி அலுவலர் (உதவி இயக்குநர்) ஆகியோர் போலியாக ஒப்புதல் கடிதம் அல்லது உத்தரவு பிறப்பித்துள்ளதை தாங்கள் நேரடியாக விசாரணை மேற்கொண்டு குற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

மேற்கண்ட பேரூராட்சியில் நடைபெற்ற தனிநபர் கழிப்பிட நிதி மோசடி மற்றும் ஊழல் சம்மந்தமாக தகவல் பெறும் உரிமை சட்டப்படி தகவல் கேட்டும், முறைகேடுகளை மறைக்க நாளது வரை தகவல் தர மறுத்தும், மேலும் பேரூராட்சிகளின் ஆணையர், மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கும் மற்றும் ஊழல் தடுப்புத்துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பலமுறை தொலைபேசியிலும், ஈ–மெயில் மற்றும் தபால் மூலம் புகார் தெரிவித்தும் சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் நடைபெற்றிருக்கும் இந்த மாபெரும் முறைகேடுகள் மற்றும் நிதி மோசடி குறித்து புகார் தெரிவித்தும் நாளது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் இந்த புகார் மனுவை தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

கழிப்பிடம் கட்டுவதற்கு, கட்ட ஆரம்பிக்கும் முன்பாக கழிப்பிடம் இடத்தை புகைப்படம் எடுத்தும் கழிப்பறை கட்டுவதற்கான வானம் தோண்டுதல், செப்டிக் டேங்க் தோண்டுதல் அதற்கான புகைப்பட கோப்பை பதிக்கும்போது பயனாளிகளுடன் புகைப்படம் மற்றும் கழிப்பிடம் முழுமையாக முடிவுற்று அக்கட்டிடத்தில் திட்டத்தின் பெயர் பயனாளிகளின் பெயர் மற்றும் வருடம் ஆகியவற்றின் புகைப்படம் தாக்கல் செய்தபின்பு பொறியாளர் ஸ்தல ஆய்வு செய்து பேரூராட்சி அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அரசு மானியம் வழங்க வேண்டும்.

ஆனால் மேற்கண்ட அரசு விதிகளையும் பின்பற்றாமல் 2015-16ஆம் ஆண்டு (187 எண்ணம்), 2016-17ம் ஆண்டு (462 எண்ணம்) மற்றும் 2017-18 ஆண்டுகளுக்குரிய (545 எண்ணம்) மொத்தம் 1194. தனிநபர் கழிப்பிடங்களை 2018ஆம் ஆண்டில் ஒரு சில நாட்களில் 40 எண்ணம், 56 எண்ணம், 70 எண்ணம், 80 எண்ணம், 90 எண்ணம், 99 எண்ணம் மற்றும் 120 எண்ணம், 56 எண்ணம், 70 எண்ணம், 80 எண்ணம், 90 எண்ணம், 99 எண்ணம் மற்றும் 120 எண்ணங்கள் என உண்மைக்கு புறம்பாக கணக்கு காட்டி அனைத்து கழிப்பிடங்களும் ஒப்பந்ததாரர்கள் கட்டியதாக பொதுமக்களுக்கு சேரவேண்டிய அரசு நிதியை ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.8000 வீதம், 1000 கழிப்பிடங்களுக்கு சுமார் 80 லட்சத்தை சேத்தூர் பேரூராட்சி அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் முறைகேடாக நிதி மோசடி செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோரிடம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனு அளித்தும் பேரூராட்சியில் நடைபெற்ற இந்த மாபெரும் நிதி மோசடி முறைகேட்டை மறைப்பதற்காக நாளது வரை இது சம்பந்தமாக எந்தவித பதிலும் தெரிவிக்க மறுக்கிறார்கள்.

இந்த மாபெரும் தனிநபர் கழிப்பிட நிதி முறைகேடு மற்றும் ஊழல் சம்பந்தமாக மதுரை மண்டல உதவி இயக்குநர் அவர்களிடமும் , ஆணையர் பேரூராட்சிகள் சென்னை அவர்களிடமும் ஆதாரங்களோடு பலமுறை புகார் தெரிவித்தும் நாளது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே கனம் இயக்குநர் அய்யா அவர்கள் சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் குற்றபுலனாய்வு நேரடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு பேரூராட்சிக்கு வருமான இழப்பினை ஏற்படுத்தி வரும் செயல் அலுவலர், தனி அலுவலர் (மதுரை மண்டல உதவி இயக்குநர்), நிர்வாக பொறியாளர், உதவி பொறியாளர், கழிப்பிடம் கட்டுவதில் முறைகேட்டில் ஈடுபட்ட அனைத்து ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொய்யான புகைப்படங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்த ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் கணினி இயக்குபவர் திரு. ப. அறிவுராஜா ஆகியோர் மீது லஞ்ச ஒழிப்பு, ஊழல் தடுப்பு மற்றும் துறை ரீதியாகவும், நிதி முறைகேடு செய்தமைக்காகவும் நடவடிக்கை எடுக்கவேண்டியும், பேரூராட்சிக்கு ஏற்படுத்திய நிதியிழப்பை மேற்கண்ட அதிகாரிகள், அலுவலக பணியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஆகியோரிடம் வசூல் செய்து அரசு கணக்கில் சேர்க்க வேண்டிக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட அதிகாரிகள் மீது குற்றபுலனாய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 21.12.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 2.1.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

சேத்தூர் பேரூராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை மற்றும் பயனாளி பங்குத் தொகையுடன் கூடிய தனிநபர் கழிப்பறைகள் கட்டுவதற்கு அட்டவணையில் காணும் எண்ணிக்கை விபரப்படி ஆண்டு வாரியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மத்திய மாநில அரசுகளின் மானிய நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Year | No.of. beneficiaries allotted | Funds release Proceedings Roc. No. and Date | Amount (Rs.in Lakh) |
|---|---|---|---|---|
| 1. | 2015-16 | 187 | Roc.No.7595/2015/U2 Date:25.05.2016 | 11.22 |
| 2. | 2016-17 | 462 | Roc.No.7595/2015/U2 Date:25.04.2017<br>Roc.No.7595/2015/U2 Date:23.12.2017 | 18.48<br>9.24 |
| 3. | 2017-18 | 545 | Roc.No.7595/2015/U2 Date:23.02.2018<br>Roc.No.19200/2014/E2 Date:12.02.2018 | 10.90<br>21.80 |
| | Total | 1194 | | 71.64 |

இதனைத் தொடர்ந்து மேற்படி அட்டவணையில் காணும் எண்ணிக்கையிலான தனி நபர் கழிப்பறைகள் கட்ட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் பெற்று கட்டுமானப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்பேரில் குறைவான எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டது. அப்பயனாளிகளுக்கு மட்டுமே அவர்களின் வங்கிக் கணக்கில் மானியத் தொகையானது பேரூராட்சி மூலம் விடுவித்து ஈடு செய்யப்பட்டது.

இந்நிலையில் மேற்படி பணிகளுக்கு நிதி அனைத்தும் விடுவிக்கப்பட்ட நிலையில் பணிகளில் முன்னேற்றமில்லாத காரணத்தால் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில் விரைந்து பணியினை முடிக்க தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டது. ஆனாலும் தனி நபர்களால் கழிப்பிடம் கட்டாமல் காலதாமதம் ஏற்பட்டது. இதனால் மாவட்ட, மாநில நிர்வாகங்களுக்கு உரிய முன்னேற்றம் காண்பிக்க இயலாமல் சிரமம் ஏற்பட்ட காரணத்தால் மேற்படி ஆய்வுக்கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படி பயனாளிகளின் ஒப்புதலுடன் இப்பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மூலம் மத்திய மாநில அரசு நிதியான ரூ.8000/- மதிப்பீட்டில் பணி மேற்பார்வையாளர், இளநிலைப்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் தொழில்நுட்ப ஆலோசனைகளின்பேரில் இப்பேரூராட்சிக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கீட்டின்படி தனிநபர் கழிப்பறை கட்டுமானப்பணிகள் முடிக்கப்பட்டது.

பின்னர் முடிவுற்ற பணிகளுக்கு இளநிலை பொறியாளரால் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு அப்பட்டியல்களானது உதவி செயற்பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்டும் தொடர்புடைய புகைப்படங்கள் சம்பந்தப்பட்ட பொறியாளரின் அறிவுரைகளின்படி கணினி இயக்குபவரால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு அதன் நகல் உரிய பதிவேடுகளில் ஒட்டி பராமரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் பயனாளிகளுக்கும், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு அட்டவணையில் கண்ட விபரப்படி காசோலை மூலம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | செ. சீ. எண். | நாள் | விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | 85 | 25.05.2016 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 10 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 80000 |
| 2 | 148 | 24.06.2016 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 10 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 80000 |
| 3 | 163 | 01.07.2016 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 20 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 160000 |
| 4 | 233 | 02.08.2016 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 9 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 72000 |
| 5 | 257 | 18.08.2016 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 14 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 112000 |
| 6 | 480 | 25.11.2016 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 17 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 136000 |
| 7 | 692 | 20.03.2017 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 11 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 88000 |
| 8 | 70 | 10.05.2017 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 11 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 88000 |
| 9 | 235 | 09.08.2017 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 8 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 64000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 311 | 21.09.2017 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 12 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 96000 |
| 11 | 403 | 03.11.2017 | தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 17 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது | 136000 |
| 12 | 464 | 06.12.2017 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தனிநபர் கழிப்பறை 10 பயனாளிகளுக்கு கட்டிய வகைக்கு தொகை ஒப்பந்தகாரருக்கு காசோலை மூலம் வழங்கியது | 80000 |
| 13 | 465 | 06.12.2017 | திரு.ல. பிரமுத்து, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தனிநபர் கழிப்பறை 10 பயனாளிகளுக்கு கட்டிய வகைக்கு தொகை ஒப்பந்தகாரருக்கு காசோலை மூலம் வழங்கியது | 80000 |
| 14 | 466 | 06.12.2017 | திரு.ச. பாலசுப்பிரமணியன் ஒப்பந்தகாரர், சேத்தூர்-தனிநபர் கழிப்பறை 10 பயனாளிகளுக்கு கட்டிய வகைக்கு தொகை ஒப்பந்தகாரருக்கு காசோலை மூலம் வழங்கியது | 80000 |
| 15 | 519 | 05.01.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தனிநபர் கழிப்பறை 10 பயனாளிகளுக்கு கட்டிய வகைக்கு தொகை ஒப்பந்தகாரருக்கு காசோலை மூலம் வழங்கியது | 80000 |
| 16 | 520 | 05.01.2018 | திரு.ல. பிரமுத்து, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தனிநபர் கழிப்பறை 10 பயனாளிகளுக்கு கட்டிய வகைக்கு தொகை ஒப்பந்தகாரருக்கு காசோலை மூலம் வழங்கியது | 80000 |
| 17 | 521 | 05.01.2018 | திரு. க. சங்கர், ஒப்பந்தகாரர், சேத்தூர்-தனிநபர் கழிப்பறை 20 பயனாளிகளுக்கு கட்டிய வகைக்கு தொகை ஒப்பந்தகாரருக்கு காசோலை மூலம் வழங்கியது | 160000 |
| 18 | 538 | 19.01.2018 | தூய்மை இந்தியா திட்டம் 2015-2016ன் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டிய 10 பயனாளிகளுக்கான மானியத் தொகை மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கியது. | 80000 |
| 19 | 644 | 19.03.2018 | திரு. சோ.செல்வமுனி, ஒப்பந்தகாரர், சேத்தூர்- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பறை 30 எண்ணம் பயனாளிகளுக்கு கட்டி கொடுத்த வகைக்கு தொகை காசோலை மூலம் வழங்கியது. | 240000 |
| 20 | 252 | 23.07.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் தனிநபர் கழிப்பறை 40 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 320000 |
| 21 | 274 | 02.08.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் தனிநபர் கழிப்பறை 80 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 640000 |
| 22 | 301 | 14.08.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் தனிநபர் கழிப்பறை 110 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 880000 |
| 23 | 308 | 16.08.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் தனிநபர் கழிப்பறை 80 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 640000 |
| 24 | 351 | 31.08.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்-தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் தனிநபர் கழிப்பறை 80 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு | 640000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | |
| 25 | 357 | 03.09.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்- தூய்மை இந்தியா திட்டம் 2017–2018ன் கீழ் தனிநபர் கழிப்பறை 90 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 720000 |
| 26 | 378 | 17.09.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்- தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் தனிநபர் கழிப்பறை 56 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 448000 |
| 27 | 405 | 20.09.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்- தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் தனிநபர் கழிப்பறை 70 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 560000 |
| 28 | 407 | 24.09.2018 | திரு.சோ.செல்வமுணி, ஒப்பந்தகாரர், சேத்தூர்- தூய்மை இந்தியா திட்டம் 2017–2018ன் கீழ் தனிநபர் கழிப்பறை 120 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 960000 |
| 29 | 408 | 24.09.2018 | திரு.சோ.சடையாள் முனியாண்டி, ஒப்பந்தகாரர், சேத்தூர்- தூய்மை இந்தியா திட்டம் 2017–2018ன் கீழ் தனிநபர் கழிப்பறை 120 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 960000 |
| 30 | 409 | 24.09.2018 | திரு.க. சங்கர், ஒப்பந்தகாரர், சேத்தூர்- தூய்மை இந்தியா திட்டம் 2017–2018ன் கீழ் தனிநபர் கழிப்பறை 56 எண்ணம் கட்டி கொடுத்த வகைக்கு மானியத் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 792000 |
| | | | மொத்தம் | 9552000 |

மேற்கண்ட செலவினங்கள் அனைத்தும் மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்புடைய நிதியாண்டுகளுக்கு உள்ளாட்சி தணிக்கைத்துறையின் மூலம் தணிக்கை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் நடைபெற்று சுமார் 4 ஆண்டுகள் ஆன நிலையில் அது தொடர்புடைய கோப்புகள் நிரந்தரமாக பாதுகாக்கப்பட வேண்டியதாக இல்லாத நிலையிலும் முறையாக பராமரிப்பு இல்லாத நிலையிலும் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் மேலான உத்தரவிற்கிணங்க கடந்த சில தினங்களாக தொடர்புடைய செலவுச்சீட்டுகள், கோப்புகள் ஆகியவற்றை மிகுந்த சிரமத்துடன் தேடி ஒருங்கிணைத்து அறிக்கையாகவும் மற்றும் ஆவணங்களையும் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பித்துக்கொள்ளப்படுகிறது.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் நாகர்கோவிலில் உள்ள சுற்றுலா மாளிகையில் நடைபெறும் விசாரணைக்கு 03.01.2023 அன்று ஆஜராகுமாறு 22.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

03.01.2023 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வு நிலை பேரூராட்சியில் பிரதம மந்திரி திட்டத்தின் தூய்மை இந்தியா திட்டத்தில் கட்டப்பட்ட தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் பெரும் முறைகேடுகள் நடந்துள்ளன. பேரூராட்சியின் செயல் அலுவலர், நிர்வாக பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் கணினி இயக்குபவர் ஆகியோரால் மேற்கண்ட முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. மேற்கண்ட பேரூராட்சியில் 1194 தனிநபர் கழிப்பிடம் கட்டியதில், அங்கு வெறும் 90 பேருக்கு மட்டுமே மத்திய மற்றும் மாநில அரசின் பங்குதொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1104 நபர்களுக்கு ஒரு கழிப்பிடத்திற்கு ரூபாய் 8000–ஐ கழிப்பிடங்களைக் கட்டிய பொதுமக்களுக்கு வழங்காமல் ஒப்பந்ததாரர்களின் பெயர்களில் காசோலைகளை வழங்கி பேரூராட்சி அலுவலர்கள் நிதி மோசடி செய்துள்ளனர். இது குறித்து பேரூராட்சி இயக்குநர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புகார் மனுக்கள் அனுப்பியுள்ளேன். ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே மேற்கண்ட தனிநபர் கழிப்பிடங்களை கட்டியதாக பொய்யான புகைப்படங்களை கணினியில் பதிவேற்றம் செய்துள்ள ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் Computer Operator மீது தகுந்த நடவடிக்கை எடுத்திடவும், பேரூராட்சிக்கு நிதி இழப்பினை ஏற்படுத்திய பேரூராட்சி அலுவலர் மீதும், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் வசூல் செய்து அரசு கணக்கில் சேர்ப்பதற்கும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 15.12.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமுலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பான 90 பயனாளிகளுக்கு மட்டுமே தொகை வழங்கப்பட்டதன் விவரம், இது தொடர்பான பட்டியல், புகைப்பட நகல்கள் போன்றவை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன என குறிப்பிட்டுள்ளார்."

03.01.2023 அன்று சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சேத்தூர் பேரூராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை மற்றும் பயனாளி பங்குத் தொகையுடன் ஒரு தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.12,000/– வீதம் 1194 தனிநபர் கழிப்பறைகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மத்திய மாநில அரசுகளின் மானிய நிதி விடுவிக்கப்பட்டது. தனிநபர் கழிப்பிடங்கள் கட்டுவதில் கால தாமதம் ஏற்பட்டதில், ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் ஆய்வுக் கூட்டங்களில் பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தியதன் பேரில், அரசு நிதியான ரூபாய் 8000/– மதிப்பீட்டில் இலக்கீட்டின்படி தனிநபர் கழிப்பறைகள் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டது. முடிவுற்ற பணிகளை இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு பின்னர் உரிய பயனாளிகளுக்கும், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கும் காசோலைகள் மூலம் தொகை வழங்கப்பட்டன. அவற்றின் விவரங்களை எனது 2.1.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும்

மேற்கண்டஎனது 2.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள பிற விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் நடைபெற்று 4 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் தொடர்புடைய கோப்புகள் பேரூராட்சியால் சரியாக பராமரிக்காததால் இந்நிகழ்வு தொடர்பாக ஒருசில விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

"மனுதாரர், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வு நிலை பேரூராட்சியில் பிரதம மந்திரி திட்டத்தின் தூய்மை இந்தியா திட்டத்தில் கட்டப்பட்ட தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் பெரும் முறைகேடுகள் நடந்துள்ளன எனவும் பேரூராட்சியின் செயல் அலுவலர், நிர்வாக பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் கணினி இயக்குபவர் ஆகியோரால் மேற்கண்ட முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. மேற்கண்ட பேரூராட்சியில் 1194 தனிநபர் கழிப்பிடம் கட்டியதில், அங்கு வெறும் 90 பேருக்கு மட்டுமே மத்திய மற்றும் மாநில அரசின் பங்குதொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், மீதமுள்ள 1104 நபர்களுக்கு ஒரு கழிப்பிடத்திற்கு ரூபாய் 8000–ஐ கழிப்பிடங்களைக் கட்டிய பொதுமக்களுக்கு வழங்காமல் ஒப்பந்ததாரர்களின் பெயர்களில் காசோலைகளை வழங்கி பேரூராட்சி அலுவலர்கள் நிதி மோசடி செய்துள்ளனர் எனவும் இது குறித்து பேரூராட்சி இயக்குநர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புகார் மனுக்கள் அனுப்பியுள்ளதாகவும் ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் எனவே மேற்கண்ட தனிநபர் கழிப்பிடங்களை கட்டியதாக பொய்யான புகைப்படங்களை கணினியில் பதிவேற்றம் செய்துள்ள ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் Computer Operator மீது தகுந்த நடவடிக்கை எடுத்திடவும், பேரூராட்சிக்கு நிதி இழப்பினை ஏற்படுத்திய பேரூராட்சி அலுவலர் மீதும், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் வசூல் செய்து அரசு கணக்கில் சேர்ப்பதற்கும் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சேத்தூர் பேரூராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை மற்றும் பயனாளி பங்குத் தொகையுடன் ஒரு தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.12,000/– வீதம் 1194 தனிநபர் கழிப்பறைகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மத்திய மாநில அரசுகளின் மானிய நிதி விடுவிக்கப்பட்டது என்று தனிநபர் கழிப்பிடங்கள் கட்டுவதில் கால தாமதம் ஏற்பட்டதில், ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் ஆய்வுக் கூட்டங்களில் பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தியதன் பேரில், அரசு நிதியான ரூபாய் 8000/– மதிப்பீட்டில் இலக்கீட்டின்படி தனிநபர் கழிப்பறைகள் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டது என்று முடிவுற்ற பணிகளை இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு பின்னர் உரிய பயனாளிகளுக்கும், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கும் காசோலைகள் மூலம் தொகை வழங்கப்பட்டன என்று மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் நடைபெற்று 4 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் தொடர்புடைய கோப்புகள் பேரூராட்சியால் சரியாக பராமரிக்காததால் இந்நிகழ்வு தொடர்பாக ஒருசில விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை என்று சேத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மனுதாரர் போதிய ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை.

விசாரணைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியின் பிரதம மந்திரி திட்டத்தின்கீழ் தூய்மை இந்தியா திட்டத்தில் கட்டப்பட்ட ஒரு தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு 12,000/- வீதம் 1194 தனிநபர் கழிப்பறைகள் கட்டுவதற்கு மத்திய/மாநில அரசுகளின் மானிய நிதி விடுவிக்கப்பட்டு தனிநபர் கழிப்பிடங்கள் கட்டுவதில் கால தாமதம் ஏற்பட்டதில், ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் ஆய்வுக் கூட்டங்களில் பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தியதன் பேரில், அரசு நிதியான ரூபாய் 8000/– மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர்கள் மூலம் தனிநபர் கழிப்பறைகள் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டது என்று பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தின் மூலம் தெரியவருகிறது.

தனிநபர் கழிப்பிடம் கட்ட ரூ.12,000/-க்கு மத்திய/மாநில அரசுகளில் மானியமாக ரூ.8000/- மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர்களின் மூலம் தனி நபர் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டதற்கான மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளனவா என செயல் அலுவலரின் விசாரணை அறிக்கையிலும் தெரிவிக்கவில்லை. மேலும், பயனாளிகளின் பங்கீட்டு தொகையான ரூ.4000/-த்தை பயனாளிகளிடம் பெறாமல் தனி நபர் கழிப்பிடம் கட்டுமான பணிகள் முடித்தமைக்கு, துறை தலைவரிடம் பின்னேற்பு ஏதும் பெறப்பட்டுள்ளதா என்பது குறித்தும் மற்றும் ரூ.8000/- ஒப்பந்ததாரர் கணக்கில் செலுத்துவதற்கு துறைத் தலைவரிடம் பின்னேற்பு (Ratification) ஏதும் பெறப்பட்டுள்ளதா என பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் பின்னேற்பு குறித்து எவ்வித தகவலும் அளிக்கவில்லை. இச்செயலானது பிரதம மந்திரி தூய்மை இந்தியா திட்டத்தில், தனி நபர் கழிப்பிடம் கட்ட முறையாக பின்பற்றவேண்டிய விதிமுறைகளையும், வழிமுறைகளையும் பின்பற்றவில்லை என தெளிவாகிறது.

மேலும், மனுதாரர் கூறியுள்ள புகார்களுக்கு போதுமான ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை. பேரூராட்சியால் 2015 முதல் 2018 முடிய நான்கு ஆண்டுகளில் தனி நபர் கழிப்பிடம் சம்மந்தமாக ஆவணங்கள் மற்றும் கோப்புகள் முறையாக பராமரிப்பு இல்லை என கூறுவதும் கோப்புகள் நிரந்தரமாக பாதுகாக்கப்படவேண்டியதாக இல்லாத நிலையில் உள்ளது என செயல் அலுவலரால் அறிக்கையில் தெரிவித்திருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும். இதிலிருந்து இதில் ஏதேனும் தவறுகள் நடந்து இருக்கலாம் என இம்முறைமன்ற கருதுகிறது. எனவே இத்திட்டத்தில் நடந்துள்ள தவறுகளை கண்டறிய பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்திலிருந்து கண்காணிப்பு பொறியாளர் தலைமையில் குழு ஒன்றை அமைத்து மேற்கண்ட திட்டம் சம்பந்தமான அனைத்து கோப்புகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்தும் அனைத்து தனிநபர் கழிப்பிடங்களை கள ஆய்வு செய்தும், அனைத்து பயனாளிகளிடம் விசாரணை மேற்கொண்டு அதன் அறிக்கையினை 3 மாதத்திற்குள் பேரூராட்சியின் இயக்குநருக்கு அனுப்பிவைக்குமாறு இம்முறை மன்றம் நடுவம் ஆணையிடுகிறது. அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கை தொடர பேரூராட்சிகளின் இயக்குநரை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

இந்நேர்வில் ஏற்கனவே உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஆய்வு செய்திருப்பினும், மீண்டும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஒரு குழுவினை அமைத்து சேத்தூர் பேரூராட்சியில் பிரதம மந்திரியின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிப்பறைகள் கட்டியது சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் அனைத்து பட்டியல்களையும் (Bills) ஆய்வு செய்து, அதன் அறிக்கையினை மூன்று மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி

நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, பிப்ரவரி 1–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ச. கார்த்திகேயன்,
42, பிள்ளைமார் தென்வடல் தெரு,
சேத்தூர் போஸ்ட் - 626 121.
இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டம்.
2) செயல் அலுவலர்
சேத்தூர் தேர்வு நிலை பேரூராட்சி,
சேத்தூர், விருதுநகர் மாவட்டம்.
3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை,
571, அண்ணாசாலை, சென்னை – 600 035.
4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்ககம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
5) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032